## 2. தலைப்பு 02 – பிரதமர் அலுவலகம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பிரதமர் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 நவம்பர் 28 ஆந் திகதி பிரதமரின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பிரதமர் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள்

இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை**

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 02 மூலதன செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,550,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 15 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது ரூபா 8,773,003 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 6 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

2011 ஏப்ரல் 06 ஆம் திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 38,836 தொகையான கடன் மீதியும் 2011 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 3,500 தொகையான விழா முற்பணமும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

செயல் நிமித்த உப கட்டுநிதி தொடர்பாக நி.பி. 371 இன் பிரகாரம் பெறப்பட்ட முற்பணம் அந்தச் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் பெறப்பட்ட ரூபா 272,582 தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆவ்வாறே முற்பணம் வழங்கும் போது முறையான பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 நட்டங்களும் சேதங்களும்**

மோட்டார் வாகனத்திற்காக மூன்றாம் தரப்பினர் காப்புறுதிப் பூட்கையினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சந்தைப் பெறுமதியை விடக் குறைந்த பெறுமதியில் காப்புறுதி செய்யப்பட்ட காரணத்தினால் 04 மோட்டார் வாகனங்கள் விபத்திற்குள்ளாகியதன் பின்னர் ஏற்பட்ட ரூபா 1,242,417 கூட்டுத்தொகையான நட்டத்திலிருந்து ரூபா 257,770 தொகையான நட்டஈடு மாத்திரமே பெறப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் ரூபா 984,647 தொகையான இழப்பினை நட்டமாகப் பதிவழிக்கவேண்டியிருந்தது.

**2.6 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 14 | 11 | 03 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (இ) | இரண்டாம் நிலை | 44 | 43 | 01 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 67 | 62 | 05 |
| | மொத்தம் | 130 | 120 | 10 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.